**ஜனவரி – 10**

# TNPSC துளிகள்

- ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதியில் பிப்ரவரி 05 ஆம் தேதியன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்து உள்ளன.
- தமிழக அரசு ஆனது, காங்கிரஸ் தலைவர் K.V. தங்கபாலுவினை 2024 ஆம் ஆண்டிற்கான பெருந்தலைவர் காமராஜர் விருதிற்குத் தேர்வு செய்துள்ளது.
- தமிழகத்தின் முதல் மிதக்கும் உணவகம் ஆனது சென்னை அருகே உள்ள முட்டுக்காடு உப்பங்கழியில் திறக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசானது, V.நாராயணனை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) புதியத் தலைவராகவும், விண்வெளித் துறையின் செயலாளராகவும் நியமித்து உள்ளது.
- புனேவைச் சேர்ந்த ஒரு புத்தொழில் நிறுவனமான ஆத்ரேயா இன்னோவேஷன்ஸ் என்பது, ஆயுர்வேத பயிற்சியாளர்களுக்காக, நோயாளிகளின் ஆரோக்கியத்தினை 22 அளவுருக்கள் மூலம் கண்காணித்து 10 இந்திய மொழிகளில் அது குறித்த ஒரு முக்கிய அறிக்கையினை உருவாக்கக் கூடிய நாடி தரங்கிணி எனப்படுகின்ற ஒரு செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான நாடித்துடிப்பு கண்டறியும் கருவியை உருவாக்கி உள்ளது.
- PMMSY என்ற முன்னெடுப்பின் கீழ், சிக்கிம் மாநிலத்தின் சோரெங் மாவட்டத்தில் இந்தியாவின் முதல் கரிம மீன்வளத் தொகுப்பானது தொடங்கப்பட்டுள்ளது.
- BRICS நாடுகளின் தற்போதைய தலைமை பொறுப்பினை வகிக்கும் நாடான பிரேசில், இந்தோனேசிய நாடானது இந்தக் கூட்டமைப்பின் முழு உறுப்பினராக இணைந்து உள்ளதை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- இந்தியாவில் கல்வி பயில விரும்பும் சர்வதேச மாணாக்கர்களுக்காக வேண்டி இந்திய அரசானது 'இணையவழி-மாணாக்கர் நுழைவு இசைவுச் சீட்டு' மற்றும் 'இணையவழி-மாணாக்கர்-X நுழைவு இசைவுச் சீட்டு' ஆகிய இரண்டு சிறப்பு வகை நுழைவு இசைவுச் சீட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - 'இணையவழி-மாணாக்கர் நுழைவு இசைவுச் சீட்டு என்பது இந்தியாவில் தங்கள் கல்வியைத் தொடர விரும்புபவர்களுக்கானது என்பதோடு மட்டுமல்லாமல் இணைய வழி - மாணாக்கர் -X நுழைவு இசைவுச் சீட்டு என்பது இணைய வழியில் மாணாக்கர் நுழைவு இசைவுச் சீட்டு வைத்திருப்பவர்களைச் சார்ந்தவர்களுக்கு ஆனது.

# தேசியச் செய்திகள்

## பிடியாணை பெறத் தகு குற்றங்கள் மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு


- மிகவும் கடுமையான மற்றும் சாதாரண குற்றங்கள் தொடர்பான காவல் துறை விசாரணைகளுக்கான அளவுருக்களை உச்ச நீதிமன்றம் தெளிவுப்படுத்தியுள்ளது.
- நீதிமன்றம் பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றம் மற்றும் பிடியாணை பெறத்தகு குற்றங்களை வேறுபடுத்தியுள்ளது என்பதோடு பிடியாணை பெறத் தகு குற்றங்களுக்கான பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrPC) 167வது பிரிவானது, விசாரணையின் போது

குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபரை வெவ்வேறு வகையான காவலில் வைக்க நீதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது.

- 167வது பிரிவின் துணைப் பிரிவு (2) ஆனது, காவலில் வைப்பதற்கான நடைமுறையை வகுத்துள்ளதோடு, காவலில் ஒருவரை வைத்திருக்க 15 நாட்கள் வரை என்ற அதிகபட்ச வரம்பினை நிர்ணயித்துள்ளதால் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றங்கள் என்பவை, முன் அனுமதியின்றி அதற்கான விசாரணையைத் தொடங்க காவல்துறைக்கு அனுமதியளிக்கின்றன.
- பிடியாணை பெறத் தகு குற்றங்களுக்கு காவல்துறை நடவடிக்கை எடுப்பதற்கு முன் அதற்கு நீதிபதியின் உத்தரவு அவசியமாகும்.
- தனி மனித உரிமைகள் மற்றும் மாநில அதிகாரங்களுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்கு இந்த வேறுபாடு முக்கியமானதாகும்.




## இந்தியாவில் வருமானச் சமத்துவமின்மைப் போக்குகள் 2023





- இந்தியாவின் கடும் வருமானச் சமத்துவமின்மையானது 2023 ஆம் ஆண்டில் 1950 ஆம்

ஆண்டுகளில் இருந்ததை விட அதிகமாக இருந்தது.

- இந்தியாவிற்கான கினி குணகம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 0.410 ஆக இருந்தது என்ற நிலையில் இது 1955 ஆம் ஆண்டில் 0.371 ஆக இருந்தது.
- முன்னதாக, 2021 ஆம் ஆண்டில், பெருந்தொற்றின் பாதகமானத் தாக்கத்தினால், கினி குணகம் 0.528 ஆக உயர்ந்தது.
- 1955 ஆம் ஆண்டில் சுமார் 3 சதவீதமாக இருந்த 'அடிமட்டத்தில் உள்ள 10 சதவீதக் குடும்பங்களின் வருமானம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 2.38 சதவீதமாகக் குறைந்தது.
- இதற்கிடையில், 'அடிமட்டத்தில் உள்ள 50 சதவீதம்' குடும்பங்களின் பங்கு ஆனது 22 சதவீதத்தில் இருந்து 22.82 சதவீதமாக சற்று உயர்ந்துள்ளது.
- கினி குணகம் என்பது பொருளாதாரத்திற்குள் தனி நபர்கள் அல்லது குடும்பங்களுக்கு இடையேயான வருமானப் பகிர்வு எந்த அளவிற்குச் சமமான நிலையிலிருந்து விலகி உள்ளது என்பதை அளவிடுகிறது.
- 0 என்ற கினி குறியீடுயானது முழுமையானச் சமத்துவத்தினைக் குறிக்கிறது, அதே சமயம் 1 ஆனது முழுமையான சமத்துவமின்மையைக் குறிக்கிறது.
- இதன் அதிக மதிப்பு, அதிக வருமான சமத்துவமின்மையைக் குறிக்கிறது.
- உலக சமத்துவமின்மை தரவுத் தளத்தின்படி, 2023 ஆம் ஆண்டில் தேசிய வருமானத்தில் சுமார் 22.6 சதவீத வருமானத்தினை 'உயர்மட்ட1 சதவீதத்தில் உள்ள நபர்கள்' கொண்டு உள்ளனர்.

## மத்தியப் புலனாய்வு அமைப்பின் BHARATPOL இணைய தளம்





- மத்திய அரசானது, சட்ட விசாரணை நிறுவனங்களுக்கான சர்வதேச ஒத்துழைப்பைச் சீரமைப்பதற்காக 'BHARATPOL' இணைய தளத்தினைத் துவக்கியுள்ளது.
- BHARATPOL என்பது சர்வதேச காவல் துறை ஒத்துழைப்பு மூலம் முக்கிய பன்னாட்டுக்

குற்றங்களுக்கு எதிரான உதவி மற்றும் நிகழ்நேர நடவடிக்கைக்கான தகவல் பரப்பு மையமாகும்.

- இது மத்தியப் புலனாய்வு அமைப்பு (CBI) மூலம் உருவாக்கப்பட்டது.
- மத்திய மற்றும் மாநில முகமைகள் சர்வதேச காவல் துறையுடன் எளிதாக தொடர்பு கொள்ளவும், அவர்களின் விசாரணைகளை விரைவுபடுத்தவும் இது வழி வகுக்கும்.
- இந்த இணைய தளமானது, CBI அமைப்பு மற்றும் சர்வதேச காவல் அமைப்பினை (NCB - புது டெல்லி) இந்தியாவில் உள்ள அனைத்துச் சட்ட அமலாக்க ஆணையங்களுடன் ஒருங்கிணைக்கிறது.
- BHARATPOL ஆனது இணைப்பு, சர்வதேச காவல் துறையின் அறிக்கைகள், குறிப்புகள், தகவல் ஒளிபரப்பு மற்றும் மூலங்கள் என ஐந்து முக்கிய மாதிரிகளைக் கொண்டு உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## திபெத்-நேபாள நிலநடுக்கம் 2025





- நேபாள எல்லையை ஒட்டிய திபெத் பகுதியில் 7.1 ரிக்டர் அளவிலான ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது.
- இந்த நிலநடுக்கம் ஆனது, லாசா பகுதியில் - அதிகளவில் கண்டத் தட்டு அழுத்தத்தின் கீழ் உள்ள பகுதியில் - ஏற்பட்ட பிளவினால் தூண்டப்பட்டதாகும்.
- இந்திய மற்றும் யூரேசிய கண்டத் தட்டுகளின் தொடர்ச்சியான மோதலின் காரணமாக இந்தப் பகுதி நில அதிர்வு நடவடிக்கைகள் அதிகம் ஏற்படும் பகுதியாக உள்ளது.
- இது கடந்த 60 மில்லியன் ஆண்டுகளாக இமயமலையின் ஒரு முக்கிய வடிவமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி வரும் ஒரு செயல்முறையாகும்.

## அமெரிக்காவில் துருவ சுழல் காற்று மற்றும் குளிர்கால புயல்கள் 2025

- துருவச் சுழல் விரிவடைவதால் மிக கடுமையான குளிர்காலப் புயல்களை அமெரிக்கா எதிர்கொண்டு வருகிறது.

- துருவச் சுழல் ஆனது, முதன்மையாக வடக்கு அரைக் கோளத்தின் மைய அட்சரேகை முதல் உயர் அட்சரேகைகளில் அமைந்துள்ள நாடுகளை பாதிக்கிறது.
- துருவச் சுழல் ஆனது, சுமார் 155mph (250km/h) என்ற அளவு காற்றின் வேகத்துடன் வட துருவத்தைச் சுற்றி இடஞ்சுழி திசையில் சுழல்கிறது.
- அடிவளிமண்டலம் சார்ந்தது மற்றும் படையடுக்கு மண்டலம் சார்ந்தது என இரண்டு வகையான துருவ சுழல்கள் உள்ளன.
- அடிவளிமண்டலம் சார்ந்த துருவச் சுழல் ஆனது, பெரும்பாலான வானிலை நிகழ்வுகள் நிகழும் வளிமண்டலத்தின் தாழ் அடுக்கில் ஏற்படுகின்றன.
- இது மேற்பரப்பில் இருந்து சுமார் 10 கிலோ மீட்டர் முதல் 15 கிலோ மீட்டர் வரை நீண்டு உள்ளது.
- இந்தச் சுழல் ஆனது வடக்கு அட்சரேகைகள் முழுவதுமுள்ள பகுதிகளில் மிதமான ஒரு வானிலை சூழலை உருவாக்குகிறது.
- படையடுக்கு மண்டலத் துருவச் சுழல் ஆனது 15 கிலோ மீட்டர் முதல் 50 கிலோ மீட்டர் உயரத்தில் ஏற்படுகிறது.
- அடிவளிமண்டல துருவச் சுழல் போலல்லாமல், படையடுக்கு மண்டல துருவச் சுழல்கள் கோடை காலத்தில் மறைந்து இலையுதிர் காலத்தில் மிகவும் வலிமையான அளவில் தோன்றுகின்றன.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் தங்கக்குவிப்பு


- உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகள் கூட்டாக இணைந்து, 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், தங்கள் இருப்புகளில் 53 டன் தங்கத்தைச் சேர்த்துள்ளன.
- இந்திய ரிசர்வ் வங்கி தனது இருப்பில் 8 டன் தங்கத்தினை சேர்த்துள்ளது.
- இது ஆண்டுக்கான கொள்முதலை 73 டன்னாகவும், மொத்தத் தங்க இருப்பினை 876 டன்னாகவும் உயர்த்தியது.
- போலந்து நாட்டிற்கு அடுத்தபடியாக 2024 ஆம் ஆண்டில் அதிகளவில் தங்கம் வாங்கும்

இரண்டாவது பெரிய நிறுவனமாக RBI தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டு உள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## அச்சுறுத்தல் குறித்த அறிக்கை 2024




- 2024 ஆம் ஆண்டில் 95 நிறுவனங்கள் தரவுத் திருட்டுக்குப் பலியாகியுள்ளதையடுத்து, உலகளவில் இணையவெளிக் குற்றத் தாக்குதல்களுக்கு மிக அதிகம் இலக்காக குறி வைக்கப் படும் இரண்டாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- 140 தாக்குதல்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- தற்போதைய புவிசார் அரசியல் பதட்டங்கள் காரணமாக சுமார் 57 தாக்குதல்களுடன் இஸ்ரேல் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- ஹை-டெக் குழுமத்திடமிருந்து 850 மில்லியன் இந்தியக் குடிமக்களின் தரவுகள், ஸ்டார்

ஹெல்த் மற்றும் அலைடு இன்சூரன்ஸ் பெரு நிறுவனத்தின் வாடிக்கையாளர் தரவுகள் மற்றும் டெலிகம்யூனிகேஷன்ஸ் இந்தியா நிறுவனத்திடமிருந்து சுமார் 2TB அளவிலான முக்கியத் தகவல்கள் கசிவு ஆகியவை முக்கிய விதி மீறல்களில் அடங்கும்.

## உலகளாவிய நீர் கண்காணிப்பு அறிக்கை 2024




- ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழகத்தினால் (ANU) 2024 ஆம் ஆண்டு உலகளாவிய நீர்க் கண்காணிப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மட்டும், நீர் தொடர்பான பேரழிவுகள் சுமார் 8,700க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி வாங்கியுள்ளதோடு, இதனால் சுமார் 40 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.
- இது 550 பில்லியன் டாலருக்கும் அதிகமான பொருளாதார இழப்பை ஏற்படுத்தியது.
- குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் பிரேசில், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பேரழிவுகரமான வெள்ளப் பெருக்கு ஆகியவை அடங்கும்.
- 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியுடன் ஒப்பிடச் செய்கையில், 2024 ஆம் ஆண்டில் மாதாந்திர மழைப்பொழிவு ஆனது 27% அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- தினசரி மழைப் பதிவு ஆனது 52% அதிகரித்துள்ளது.
- மாறாக, குறைவான மழைப்பொழிவு பதிவுகளும் அடிக்கடி பதிவாகின.


# இதரச் செய்திகள்

## இந்திய வனவிலங்குகளில் HPAI H5N1 தொற்று

- நாக்பூரில் உள்ள பாலா சாஹேப் தாக்கரே கோரேவாடா சர்வதேச விலங்கியல் பூங்காவில், பொதுவாக 'பறவைக் காய்ச்சல்' என்று அழைக்கப்படும் அதிகத் தொற்று மிக்க பறவைக் காய்ச்சல் (HPAI) H5N1 வைரஸால் பாதிக்கப்பட்டு மூன்று புலிகளும் ஒரு சிறுத்தைப்புலியும் உயிரிழந்துள்ளன.
- (HPAI) H5N1 வைரஸ் ஆனது மிகப் பொதுவாக 'பறவைக் காய்ச்சல்' என்று அழைக்கப் படுகிறது.
- இந்தியாவில் காப்பகங்களில் வைத்து நன்கு காக்கப்படும் வனவிலங்குகளிடையே

மிகப்பெரும் உயிரிழப்பை ஏற்படுத்திய முதல் நோய்ப் பாதிப்பு இதுவாகும்.

- ஐந்து கண்டங்களில் உள்ள 108 நாடுகளில் இந்த வைரஸ் நிலையாக பரவிக் காணப் படுகிறது.




## இந்தியாவின் மெட்ரோ இரயில் சேவை வலையமைப்பின் நிலை 2025




- இந்திய மெட்ரோ இரயில் சேவை அமைப்புகள் 11 மாநிலங்கள் மற்றும் 23 நகரங்களில் 1,000 கிலோ மீட்டர் நீளம் வரைபரவியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் மெட்ரோ இரயில் திட்டங்களில் இந்தியா ஜப்பானை விஞ்சியுள்ளது.

- தற்போது, செயல்பாட்டில் உள்ள மெட்ரோ இரயில் வலையமைப்பின் நீளத்தின் மீதான அடிப்படையில் இந்தியா உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளதோடு உலகின் 2வது பெரிய மெட்ரோ வலையமைப்பாக மாறுவதற்கான முன்னேற்றப் பாதையில் உள்ளது.
- 1984 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் முதல் மெட்ரோ இரயில் பாதையானது, கொல்கத்தாவில் 3.4 கிலோ மீட்டர் நீளத்தில் எஸ்பிளனேட் மற்றும் பவானிபூர் இடையே திறக்கப்பட்டது.
- டெல்லி மெட்ரோ இரயில் கழகம் ஆனது (DMRC) 1995 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- சென்னையின் மெட்ரோ இரயில் கழகமானது 2017 ஆம் ஆண்டில் அதன் பசுமை வழித் தடத்திலான அதன் முதல் நிலத்தடி இரயில் சேவைத் தடத்தின் தொடக்கத்துடன் விரிவு செய்யப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டில், இந்தியாவானது தனது முதல் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயில் சேவையை டெல்லி மெட்ரோ இரயில் வலையமைப்பின் மெஜந்தா வழித் தடத்தில் அறிமுகப் படுத்தியது.
- 2021 ஆம் ஆண்டில் நீர்வழியில் மெட்ரோ சேவைத் திட்டத்தினை அறிமுகப் படுத்திய இந்தியாவின் முதல் நகரமாக கேரளாவின் கொச்சி மாறியது.
- 2024 ஆம் ஆண்டில், இந்தியாவின் முதல் நீரடி மெட்ரோ இரயில் சுரங்கப் பாதையானது கொல்கத்தாவில் தொடங்கப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★